# வீரமாணிக்க தேவன்துறை (மயிலிட்டி) கண்ணகி படிப்பக வரலாறும் சமூகப்பணிகளும்.

# வீரமாணிக்க தேவன் துறை (மயிலிட்டி) கண்ணகி அம்பாள் ஆலய திருப்பணிச் சபையின் தோற்றமும் செயற்பாடுகளும்.

# வீரமாணிக்க தேவன்துறை (மயிலிட்டி) கண்ணகி படிப்பக வரலாறும் சமூகப்பணிகளும்

இலங்கைத் தீவின் வடமுனையில் அமைந்துள்ள மயிலிட்டி என தற்போது அழைக்கப்படும் ஊர் வீரமாணிக்க தேவன்துறை, பெரிய நாட்டான் தேவன்துறை என சுமார் 1 1/2 மைல் நீளக் கடற்கரைப் பிரதேசத்தையும் 1/2 மைல் அகல நரசிம்மபுலம் என்னும் பிரதேசத்தையும் அடக்கியநிலப்பரப்பாகும்.
யாழ்பாணத்தை ஆண்ட அரசனின் தளபதிகளான வீரமாணிக்கதேவன், பெரிய நாட்டுத்தேவன், நரசிம்மதேவன் ஆகிய மூன்று சகோதரர்களுக்கும் அவர்கள் சேவையைப் பாராட்டி அவர்களுக்கு மானியமாகக் கொடுத்த இப்பிரதேசங்கள் அவர்களின் பெயர்களாலேயே அழைக்கப்பட்டுவந்தன.
இலங்கையில் அரசர்களின் ஆட்சி முடிவுக்குவந்தபின் இவர்கள் வழிவந்தவர்கள் மேட்டுப்பகுதியில் இருந்தவர்கள் விவசாயத்தையும் கரையோரத்தில் இருந்தவர்கள் கடல் வாணிபத்தையும், மீன் பிடித்தலையும் மேற்கொண்டு வந்தனர்.
காலப்போக்கில் கடல் வாணிபம் இலங்கை, இந்திய அரசால் தடைசெய்யப்பட்டதால் இவர்களும் மீன்பிடித் தொழிலைச் செய்து வாழத் தொடங்கினார்கள்.

ஆரம்பத்தில் மயிலிட்டி சனசமூக நிலையம் என அன்றைய இளைஞர்களால் ஆரம்பிக்கப்பட்ட வாசிகசாலை மக்களின் தேவையைக் கருதி கண்ணகிபடிப்பகம், வள்ளுவர் அறிவகம், கெனடி நூலகம் என மூன்று படிப்பகங்கள் தோன்றின. குல தெய்வமாகிய கண்ணகி அம்மனை மனதில் கொண்டு மயிலிட்டிச்சந்தியில் திரு சிவயோகநாதன், திரு குருகுலசிங்கம், திரு அருளானந்தம் ஆகியோரின் தலைமையில் கண்ணகி படிப்பகம் நிறுவப்பட்டது. அப்போதிருந்த சூழ்நிலையில் திருவாளர் அருந்தவத்திற்கும் மற்றும் பலருக்கும் சொந்தமான காணியில் திரு அருந்தவத்தின் மாமனார் திரு நாகமணியுடன் இரண்டு வருடகாலத்திற்கு மாத வாடகை கொடுத்து இருப்பதாக ஒப்பந்தம் செய்யப்பட்டு படிப்பகம் கட்டப்பட்டு இயங்கி வந்தது. இரண்டு வருடம் முடிய படிப்பகத்திற்கு வேறு இடம் பார்க்க வேண்டிய தேவை ஏற்பட்டது.

அப்போது கண்ணகி படிப்பகத் தலைவராக திரு மோ. யோகாநந்தமும் செயலாளராக நானும் (நாகேந்திரம் கருணாநிதி) பொருளாளராக திரு வை. பரமநாதனும் இருந்தோம். எமது பட்டினசபைத் தலைவர், யாழ்மாவட்ட உள்ளூராட்சி ஆணையாளர் ஆகியோரினூடாக அரச காணி ஒன்றை எடுப்பதற்கு எடுத்த முயற்சிகள் பலனழிக்காத காரணத்தால் திரு. நாகலிங்கம், திரு சிவலிங்கம் உட்பட பலருக்குச் சொந்தமாக இருந்த காணியில் அவர்களினதும் சில காணி உரிமையாளர்களின் ஒத்துழைப்புடனும் சிலரின் எதிர்ப்புடனும் எனது தகப்பனாரின் நண்பர் வழக்கறிஞர் திரு. குமரகுரு மற்றும் யாழ்மாவட்ட உள்ளூராட்சி ஆணையாளர் திரு. நல்லைநாதன் ஆகியோரின் வழிநடத்தலுடன் கண்ணகி படிப்பகத்திற்கு திரு சிவலிங்கத்தால் இரண்டு மாடிக்கட்டடத்திற்காகப் போடப்பட்ட அத்திவாரத்தில் மயிலிட்டிச்சந்தியில் நிரந்தரக் கட்டடம் அமைக்கப்பட்டது.

மேற்படி கட்டட வேலைகளுக்காக ஊரில் உள்ள எல்லா மக்களின் பங்களிப்பும் இருக்க வேண்டும் என்பதற்காக 25 சத பெறுமதியான அதிஸ்டலாபச்சீட்டு ஊரில் உள்ள எல்லா வீடுகளுக்கும் கொண்டு சென்று விற்றதுடன் அப்போது பிரபல்யமாயிருந்த "வெளிக்கிடடி விஸ்வமடுவுக்கு" போன்ற நாடகங்கள் நடத்தியும் எனது உறவினர் காங்கேசந்துறை இராஜநாயகி பட மாளிகை உரிமையாளரின் ஒத்துழைப்புடனும் கொழும்பில் திரு. C. K துரைரத்தினத்தின் முயற்சியால் சினிமாப் பட கொம்பனி உரிமையாளர் திரு. குணரத்தினத்திடம் இருந்து படக்கொப்பிகள் எடுத்து ஓடி பணம் சேகரிக்கப்பட்டது. நிர்வாகசபையில் இருந்த சிலர் பழைய கட்டடம் திருப்பிக் கொடுப்பதற்கு எதிர்ப்புத் தெரிவித்ததால் குறிப்பிட்ட சில நிர்வாக சபை உறுப்பினர்களின் ஒத்துழைப்புடன் திரு அருந்தவம் அவர்களின் வீட்டில் சீமேந்துக் கற்கள் அரியப்படன. ஒரு வெள்ளிக் கிழமை கட்டட வேலை தொடங்கப்பட்டு இரவு பகலாக சனி ஞாயிறு வேலை நடந்து திங்கட்கிழமை காலை படிப்பகம் புதிய கட்டடத்தில் இயங்கத் தொடங்கியது. நான் படிப்பகத்திற்கு அங்கத்தவர்களைச் சேர்த்து, யாப்பையும் தயாரித்த பின் காங்கேசன்துறை பட்டினசபையிலும், வலிகாமம் வடக்கு உதவி அரசாங்க அதிபர் பணிமனையிலும், யாழ்மாவட்ட உள்ளூராட்சி ஆணையாளர் பணிமனையிலும் முறைப்படி பதிவு செய்தேன்.

படிப்பகத் தளபாடங்கள் திரு. K. V துரைசாமியாலும், தினசரி, வாராந்த, மாத புதினப் பத்திரிகைகள், சஞ்சிகைகள் ஊரில் இருந்த ஒவ்வொரு தனி நபர்களின் பங்களிப்பாலும் படிப்பகம் சிறப்பாக நடந்தது. இதனால் காங்கேசன்துறைப் பட்டினசபையாலும், வலிகாமம் வடக்கு உதவி அரசாங்க அதிபர் பணிமனையாலும் யாழ்மாவட்ட உள்ளூராட்சி ஆணையாளராலும் ஒவ்வொரு வருடமும் சிறந்த படிப்பகமாக தொடர்ந்து முதலாவது பரிசைப் பெற்றுக் கொண்டுவந்தது. அத்துடன் யாழ்ப்பாண மாவட்டத்திலேயே இலவசமாக தபால்கள் அனுப்பும் சேவையை (ON HMS) பெற்ற ஒரே அரசு சார்பற்ற படிப்பகமாகவும் திகழ்ந்தது.
சமூகப் பணிகள் என்ற வரிசையில்

1. படிப்பகம் கட்டி முடித்தவுடன் மின்னிணைப்புப் பெறப்பட்டு வறிய மற்றும் வீடுகளில் மின்சார வசதியற்ற மாணவர்களுக்கு இலவச மாலை நேர வகுப்புக்கள் நடத்தப்பட்டதுடன் மாணவர்கள் இரவில் வந்திருந்து படிப்பதற்கும் ஒழுங்குகள் செய்யப்பட்டன.

2. பிரபல எழுத்தாளர்களின் புத்தகங்கள் சேகரிக்கப்பட்டு அங்கத்தவர்கள் இலவசமாக வீட்டிற்குக் கொண்டுபோய் வாசிக்கும் வசதிகள் செய்யப்பட்டது.

3. சிரமதானம் மூலம் பாடசாலை, விளையாட்டு மைதானம், ஆலயம், மயானம் போன்ற பொது இடங்கள் துப்பரவாக்கப்பட்டன.

4. சுத்தமான நீர் மக்களுக்குக் கிடைக்க வேண்டும் என்பதற்காக பொதுக் கிணறுகள் மற்றும் வசதி குறைந்தவர்களின் வீட்டுக் கிணறுகள் துப்பரவு செய்து கொடுக்கப்பட்டது.

5. மரணவீடுகளில் பாடைகட்டும் வேலை திரு. சண்முகலிங்கம் தலைமையில் நடைபெற்றது.

6. ஊரில் கோயில் மற்றும் வீட்டு விசேடங்களில் பந்தல் போட்டு வெள்ளை கட்டும் சலவைத் தொழிலாளர் முக்கியமாக கோயில் திருவிழாவின் போது பூசகரால் பலமுறை அழைப்பு விடுத்தும் உரிய காலத்தில் வராமல் இருந்ததை கருத்தில் கொண்டு படிப்பகம் அவ்வேலையைப் பொறுப்பெடுத்துத் திறம்படச் செய்தது. அதனால் வரும் வருமானம் படிப்பகத்திற்கு எடுக்கப்பட்டது.

7. கோயில் திருவிழா மற்றும் வீட்டு விசேடங்களில் மின் அலங்கார வேலையையும் முன்பு கோயிலில் செய்தவரின் வேலை திருப்தியளிக்காததால் திரு. இராசரத்தினம் தலைமையில் படிப்பகத்தால் பொறுப்பெடுத்து திறம்படச் செய்து வருமானம் படிப்பகத்திற்கு எடுக்கப்பட்டது.

8. கலைமகள் வித்தியாலைய புதிய கட்டடம் அமைக்க உதவி செய்யப்பட்டது.

9. வசதி குறைந்தவர்களுக்கு மீன்பிடி வள்ளங்களைப் பழுதுபார்பதற்காக கரைக்கு ஏற்றி இறக்கிக் கொடுப்பதன் மூலமும் படிப்பகத்திற்கு வருமானம் ஈட்டப்பட்டது.

10. ஊர் மக்கள் சமாதான நீதவானின் கையொப்பத்திற்காக மயிலிட்டி கிராமசபைத் தலைவரின் வீட்டிற்கு பலாலிக்கும், காங்கேசந்துறைப் பட்டினசபைத் தலைவர் மற்றும் வழக்கறிஞர்களின் வீடுகளுக்கு காங்கேசன்துறைக்கும் போவதைக் கருத்தில் கொண்டு திரு K. V துரைச்சாமி அவர்களைச் சமாதான நீதவானாக நியமிக்குமாறு சம்பந்தப்பட்ட அரச திணைக்களங்களுக்குப் பரிந்துரைகள் செய்யப்பட்டு வெற்றி காணப்பட்டது.

11. எமது ஊர்மக்களால் பாவிக்கப்பட்ட காங்கேசந்துறை அரச பொது வைத்தியசாலை எமது பாராளுமன்ற உறுப்பினரின் அனுசரனையுடன் தெல்லிப்பளைக்கு மாற்றப்பட்ட போது அதைத்தடுப்பதற்கு எடுத்த முயற்சிகள் தோல்வியடைந்த போதும் ஊர்மக்கள் மூன்று பேரூந்துகள் எடுத்து வைத்திய சாலைக்குப் போகும் அவலநிலையைப் போக்க மயிலிட்டிக் கூடாக வைத்தியசாலைக்குப் பேரூந்து சேவையை நடத்த எடுத்த முயற்சியும் தோல்வியுற்றது.

12. ஊரிலுள்ள காச நோய் வைத்தியசாலைக்கு வெளிநோயாளர் பிரிவுக்குத் தேவையான மருந்துகள் மற்றும் நோயாளர் காவுவண்டி என்பன திருவாளர் C.K துரைரத்தினத்திற்கூடாகப் பெறப்பட்டது.

13. தைப்பொங்கல், வருடப்பிறப்பு, தீபாவளி போன்ற பண்டிகை நாட்களில் மக்கள் குறிப்பாக இளைஞர்கள் மது அருந்திக் குழப்பங்கள் செய்வதைத் தடுக்கும் முகமாக அக்காலங்களில் காலை படிப்பக முன்றலில் பொங்கலுடன் ஆரம்பமாகி மாலை வரை குழந்தைகள் தொடக்கம் முதியோர் வரை சகலரும் பங்கு பற்றும் ஓட்டப்பந்தயம், நீச்சல்ப் போட்டி, படகுப்போட்டி, உதைபந்தாட்டப் போட்டி போன்ற விளையாட்டுக்கள் நடத்தப்பட்டன.

14. எமது ஊரின் வரலாற்றுப் பெயரை எல்லோரும் அறியும் முகமாக நான் கொழும்பிலுள்ள அரச நில அளவையாளர் திணைக்களத்திற்குச் சென்று பழைய காலத்து வரைபட பிரதிகள் எடுத்து வந்து படிப்பகத்தில் தொங்கவிட்டிருந்தேன். அதில் மயிலிட்டி என்று இல்லை. வீரமாணிக்கதேவன் துறை பெரிய நாட்டுத்தேவன் துறை என்றுதான் எமது ஊர்ப் பெயர் குறிப்பிடப் பட்டிருந்தது. இதற்கு மேலதிக சான்றாக எமது ஊரிலுள்ள காணி உறுதிகளிலும் (தோம்பு), எங்களது பிறப்பு அத்தாட்சிப்பத்திரத்திலும் வீரமாணிக்க தேவன் துறை என்றுதான் பதிவுகள் இருக்கின்றன. மயிலிட்டி என இருக்க வில்லை.

15. எமது கடல் எல்லைக்குள் தாய்வான் போன்ற வெளிநாட்டு இழுவைப் படகுகள் வந்து எங்கள் கடல்வளங்களை அபகரித்தது மட்டுமல்லாமல் எமது ஊர் மீனவர்களின் மீன்பிடி உபகரணங்களை அழித்து பெரும் நஷ்டத்தை விளைவித்துக் கொண்டிருப்பதை அப்போதைய எமது பாராளுமன்ற பிரதிநிதி திரு செல்வநாயகத்திடம் முறையிட்டு ஒருவித பலனும் கிடைக்காததால் நான் கொழும்புக்குச் சென்று அரச சுகாதார திணைக்கள மருந்துக்களஞ்சியத்திற்குப் பொறுப்பாக இருந்த திரு துரைஇரத்தினம் அண்ணருடன் கதைத்து அப்போதைய யாழ் பாராளுமன்ற பிரதிநிதி திரு மாட்டினின் ஆலோசனையின் பெயரில் அரச திறைசேரியில் உதவிப் பணிப்பாளராக இருந்த எனது அண்ணர் திரு சீவரத்தினம், அரசமின்சார சபைத் தலைவராக இருந்த திரு பொனிபஸ் ஆகியோரை இணைத்து மயிலிட்டி கடற்தொழிலாளர் நலன்புரிச் சங்கம் கொழும்புக் கிளையை ஆரம்பித்து அதனூடாக அப்போதைய நிதி மந்திரி திரு றொணிடிமல் மற்றும் அப்போதைய பிரதமமந்திரி திருமதி சிறிமாவோபண்டாரநாயக்கா ஆகியோரைச் சந்தித்துப் பாராளுமன்றத்திற்கூடாக வெளிநாட்டு இழுவைப் படகுகள் எங்கள் கடல் எல்லைக்குள் வரவிடாமல் தடுக்க முடிந்தது.

16. விளையாட்டுத்துறையில் திரு வடிவேஸ்வரன் தலைமையில் கண்ணகி உதைபந்தாட்டக்கழகம் யாழ்மாவட்டத்தில் சிறந்ததாக விளங்கியதுடன் வருடாவருடம் காங்கேசன்துறை பட்டினசபையாலும், வலிகாமம் வடக்கு உதவி அரசாங்க காரியாலயத்தாலும் நடாத்தப்படும் போட்டிகளில் முதலாவது இடத்தைப் பெற்றுக் கொண்டு வந்தது. அந்த நாட்களில் எமது ஊருக்கு வந்து உதை பந்தாட்டத்தில் எம்முடன் போட்டியிட்ட எந்த ஒரு கழகமும் எங்களை வென்றது கிடையாது. கரப்பந்தாட்டக் கழகமும் சிறப்பாக இயங்கியது. இலண்டனில் எமது ஊர் இளைஞர்களால் முதல்முதல் ஆரம்பிக்கப்பட்ட உதைபந்தாட்டக் கழகமும் கண்ணகி உதைபந்தாட்டக்கழகம் என்றே பெயர் சூட்டப்பட்டு ஒவ்வொரு வருடமும் இலண்டனில் நடக்கும் போட்டிகளில் பங்குபற்றி வெற்றிகளை ஈட்டியது எமக்கு பெருமை தரும் விடையமாகும்.

இடையில் ஊர் ஒற்றுமையைப் பேணுவதற்காக திரு வேல்நாயகம் அவர்கள் புளூஸ்ரார் விளையாட்டுக்கழகம் என ஊரில் உள்ள எல்லாப் படிப்பகத்தைச் சேர்ந்த இளைஞர்களையும் சேர்த்து வெளி இடங்களுக்கு போட்டிக்கும், சினேகிதபூர்வமாகவும் போய் விளையாடும் போது புளூஸ்ரார் என்றே பதிவு செய்து விளையாடினோம் நான் புளூஸ்ரார் விளையாட்டுக்கழத்தில் பொருளாளராக ஆரம்பகாலம் தொடக்கம் பணியாற்றினேன்.

ஊருக்கு ஒரு பொது விளையாட்டு மைதானம் மயிலிட்டிச் சந்திக்கு அருகாமையில் (பல்லப்பை) அமைப்பதற்கு நான் எடுத்த முயற்சி என்னுடன் நிர்வாகத்திலிருந்த சிலரின் கருத்து வேறுபாட்டினால் நிறைவேறாதது எனக்கு பெரிய மனக்கவலையைத் தந்த விடையமாகும்.

சமயத்துறையில் திருவெம்பாவைக் காலத்தில் அதிகாலை 4, 5 மணிக்கு எழும்பி சங்கு சேமக்கல வாத்தியங்களுடன் ஊர் முழுவதும் திருவெம்பாவைப் பாட்டுப் பாடி ஊர் மக்களை எழுப்புவது மட்டுமல்லாமல் கண்ணகி அம்பாள் ஆலய சகல உற்சவ காலங்களிலும் கோயில்த் திருப்பணிகள் செய்வது மருதடிப்பிள்ளையார் தீர்த்த உற்சவத்தின் பின் பிள்ளையார் அம்மன் ஆலயத்திற்கு மதியம் வரும் போது அன்னதானம் வளங்குவதிலிருந்து இரவு திரும்பப் பிள்ளையார் கோயிலுக்குப் போகும் போது வீதியலங்காரம், கலை நிகழ்ச்சிகள் என்பன ஒழுங்கு செய்யப்பட்டது. முக்கியமாக கண்ணகி அம்மன் ஆலயத் தேர்திருப்பணியை திரு இரத்தினராசா, திரு வையாபுரி, திரு துரைஐயா ஆகியோர் தொடங்கிய போது திருவாளர் விநாசித்தம்பி அவர்களிடம் அருள்வாக்குப் பெற்றமை, தேர் வடம் வேண்ட திரு R V G இராமசமிப்பிள்ளையிடம் சென்றமை உட்பட தேருக்குத் தேவையான மருத மரங்களை சேகரிப்பதற்காக அப்போது சீமேந்துக்கூட்டுத்தாபனத்தில் வேலை பார்த்துக் கொண்டிருந்த திரு இரத்தினராசாவால் ஒழுங்கு செய்யப்பட்ட உழவு இயந்திரம் கேபிள் முதலிய உபகரணங்களுடன் மன்னார் மாவட்டத்திற்குச் சென்று அங்கு பெருந்தெருக்கள் திணைக்களத்தில் வேலை செய்து கொண்டிருந்த திரு வேல்நாயகத்துடன் சில நாட்கள் சில இளைஞர்கள் தங்கியிருந்து அப்போது மன்னார் மாவட்ட உதவி அரச அதிபராக இருந்த செங்கை ஆழியானின் உதவியுடன் ஆற்றங்கரையில் இருந்து மருதமரங்கள் வெட்டப்பட்டு யானையின் உதவியுடன் வீதிக்குக் கொண்டுவந்து உழவுயந்திரத்தில் ஏற்றி ஊருக்குக் கொண்டு வரப்பட்டது. நான் கொழும்பில் அரச நீர்ப்பாசனத் திணைக்கள தலமைக்காரியாலயத்தில் வரைவல்லாளனாக வேலை செய்து கொண்டிருந்த போது தேர் வேலையை ஆரம்பித்தவர்களிடையே பணம் சேகரித்த போது ஏற்பட்ட அபிப்பிராய பேதங்களினால் தேர் வேலையில் தாமதம் ஏற்பட்டதால் எனது சகோதரர் திரு சீவரத்தினத்துடன் திரு ஆனந்தசிங்கம் போன்ற உயர் அரச பதவிகளில் இருந்த சில ஊரவர்களிடமும், லீலாஸ்ரோர்ஸ் திருவாளர் சின்னத்துரை போன்ற வியாபாரத் தொழிலில் ஈடுபட்டுள்ள சில நண்பர்கள், உறவினர்களிடமும் பணம் சேகரித்து வேலைகளை நிறைவேற்றக் கூடியதாக இருந்தது. வருடாவருடம் தெல்லிப்பளை ஆலய திருவிழாவின் போதும் திருக்கேதீஸ்வரம் தேர்த் திருவிழாவின் போதும் சுவாமிகாவுவதற்காக அவ்வாலயங்களைச் சேர்ந்தவர்களால் கண்ணகி படிப்பக இளைஞர்கள் அழைக்கப்படுவது வழக்கமாக இருந்தது.

வருங்காலத்தில் படிப்பகத்தை விஸ்த்தரித்து இரண்டு மாடிக் கட்டடம் கட்டி நிலமட்டத்தில் பெரிய மண்டபமும் முதலாவது மாடியில் படிப்பகம், நூலகம், விளையாட்டு உபகரணங்களுடன் கூடிய அறைகள் என்பன கட்டுவதற்கு வரை படங்களும் தயார் செய்து வைத்திருந்த வேளையில் கண்ணகி அம்பாள் தேர்த் திருப்பணியில் ஏற்பட்ட சில நிகழ்ச்சிகள் என்னை சிந்திக்க வைத்ததால் ஆலய வேலைகளில் எனது முழுக்கவனத்தையும் செலுத்த வேண்டிய காரணத்தாலும் மற்ற இளைஞர்களுக்கும் சந்தர்ப்பம் கொடுப்பதற்காகவும்

திரு கைலைநாதரை தலைவராக நியமித்த பின் பல வருடங்களாக நான் சேவையாற்றிய செயலாளர் பதவியிலிருந்து விலகினேன். நான் விலகிய பின்பு படிப்பகத்தில் எந்தவிதமுன்னேற்றமும் ஏற்படாதது மட்டுமல்லாமல் கடந்த கால செயற்பாடுகளும் குறைவடையத் தொடங்கியதைப் பார்த்து மனவருத்தப்பட்டேன்.

## வீரமாணிக்க தேவன் துறை (மயிலிட்டி) கண்ணகி அம்பாள் ஆலய திருப்பணிச் சபையின் தோற்றமும் செயற்பாடுகளும்

அம்பாளிற்கு தேர் செய்த போது கண்ணகி படிப்பகச் செயலாளராக இருந்த நான் (நாகேந்திரம் கருணாநிதி) அதில் என்னை முழுமையாக ஈடுபடுத்திக் கொண்டதாலும், ஆலய வேலைகளை ஒரு அமைப்பை ஏற்படுத்தி அதன் மூலம் செய்தால் நல்லது என முடிவு செய்தேன்.

நான் சிறுவனாக இருந்த போது கண்ணகி அம்பாள் ஆலயத்தில் மணியம் என்ற பொறுப்பில் ஒரு வயது முதிர்ந்தவர் இருந்தார். அவரை நாங்கள் கறுத்தப்பாஜி என அழைப்போம். ஆலய வேலைகளை அவரே பார்துக் கொண்டிருந்தார். ஊரவர் எல்லோரும் அவர் சொல்லுக்குக் கட்டுப்பட்டவர்களாக இருந்தார்கள். அவர் காலத்தில் தான் சுண்ணாம்புக் கட்டடமாக இருந்த ஆலயம் முற்றாக இடிக்கப்பட்டு கருங்கல்லால் கட்டத் தொடங்கப்பட்டது. அவர் காலமாகிய பின்பு திரு இளையதம்பி (சந்திரசேகரம்), திரு துரைராசா ஆகியோருடன் ஊரிலிருந்த பலர் சேர்ந்து ஆலய நிர்மாண வேலையை நிறைவு செய்தார்கள். ஆலயத்திற்கு மணியம் என்று யாரும் நியமிக்கப்படவில்லை.

சிறுவயதிலிருந்து எங்கள் குலதெய்வமாகிய கண்ணகி அம்பாளின் மேல் உள்ள அளவு கடந்த பக்தியும், கண்ணகி படிப்பகத்தில் இருந்த போது எனக்குக் கிடைத்த அனுபவமும் ஊரில் என் தகப்பனார் வாழ்ந்த வாழ்க்கையால் ஊர் மக்கள் என்னில் வைத்திருந்த நம்பிக்கையையும் வைத்து நான் வயதில் சிறுவனாக இருந்த போதும் வயது முதிர்ந்தவர்கள் எடுக்கும் ஆலயப் பொறுப்பை எடுத்து ஆலய அர்ச்சகர்கள் திரு நவமணி ஐயா, திரு ஆனந்தசிவம் ஐயா ஆகிய இருவரையும் ஆலோசகர்களாகவும், கொடைவள்ளலும் சமாதான நீதவானுமாகிய திரு K. V. துரைசாமி, மற்றும் எமது பட்டினசபை உறுப்பினரும் ஊர் முன்னேற்றத்திற்காக அயராது பாடுபடுபவருமான திரு V. இரத்தினராசா ஆகியோரை போசகர்களாகவும், வயது முதிர்ந்த ஒருவரை தலைவராக நியமிக்கும் நோக்கில் இங்கும் ஊர் ஒற்றுமையை மனதில் கொண்டு திரு இலங்கைநாயகத்தைத் தலைவராகவும் நான் செயலாளராகவும் திரு வை. பரமநாதனை பொருளாளராகவும் கண்ணகி படிப்பக இளைஞர்கள் சிலரை நிர்வாகசபை உறுப்பினர்களாகவும் கொண்டு கண்ணகி அம்பாள் திருப்பணிச்சபையை

ஆரம்பித்தேன். திருப்பணிசபைக்கு ஒரு யாப்பைத் தயாரித்து அதில் ஆலய அர்ச்சகர்களிடம் ஏற்பட்ட கோயிலை தங்களிடமிருந்து திருப்பணிச்சபை எடுத்து விடுமோ என்ற அச்சத்தை நீக்கும் பொருட்டு யாப்பில் முதலாவது விதியாக திருப்பணிச்சபையின் நோக்கம் ஆலய நிர்வாகத்தில் பூசகர்களுக்கு உதவியாயிருப்பது தான் என எழுதியிருந்ததுடன் ஆலயம் பூசகர்களுக்குச் சொந்தமாக இருந்த காரணத்தால் இச்சபையை அரசதிணைக்களங்களில் பதிவு செய்யாமல் விட்டிருந்தேன்.

கண்ணகி படிப்பகத்தால் மேற்கொண்ட அனைத்துச் சமயம் சார்ந்த, கண்ணகி அம்பாள் ஆலயம் சார்ந்த வேலைகள் எல்லாம் திருப்பணிச்சபையால் பொறுப்பெடுத்து நடத்தப்பட்டன. முக்கியமாக அம்பாள் ஆலய பொதுத் திருவிழாக்களான தேர், தீர்த்தம், பூங்காவனம், தெப்பத்திருவிழா என்பனவற்றின் உள்த் திருவிழாச் செலவை தனிப்பட்டவர்களிடம் விட்டுவிட்டு வெளிச் செலவுகள் முக்கியமாக தேர்த்திருவிழாவின் போது அன்னதானம், தீர்த்தத் திருவிழாவில் இரவு அம்மன் பிள்ளையார் கோவிலிலிருந்து அம்மன் கோயிலுக்கு வரும்போது வீதிச்சோடனை, பூங்காவனப் பந்தல்ச்சோடனை, தெப்பத்திருவிழாவில் அம்பாள் கடலில் ஊர்வலம் போய் கடலிலேயே மேடை அமைத்தல் உட்பட எல்லாப் பொதுத் திருவிழாவிற்கும் சிகரங்கள், லைட்மெசின்கள், நாதஸ்வர மேளக்கச்சேரிகள், வாணவேடிக்கைகள், நாட்டியக்கச்சேரிகள் என்பன ஒழுங்கு செய்து இளைஞர் திருவிழா (பெடியள் திருவிழா) என திருப்பணிச்சபையால் பொறுப்பெடுத்து நடத்தப்பட்டன.

ஆலயத்திற்கு தேர் செய்து முடிந்ததும் கொடித்தம்பம் வைப்பது பற்றிய சர்ச்சைகள் கிளம்பின. நான் கீரிமலை நகுலேஸ்வரக்குருக்கள், நயினை நாகபூசணிஅம்மன் ஆலயக் குருக்கள், திருக்கேதீஸ்வரக் குருக்கள், திருக்கோணேஸ்வரக்குருக்கள், கொழும்பு பொன்னம்பலவாணேஸ்வரக்குருக்கள் ஆகியோரைத் தனித்தனியாகச் சந்தித்து அபிப்பிராயம் கேட்ட போது மூலஸ்த்தானத்தில் கண்ணகி அம்பாள் இருப்பதனால் மானிடப் பிறவியாகிய கண்ணகிக்கு நந்தி கொடித்தம்பம் வைக்காமல் தேரை தேருக்குரிய கிரியைகள்செய்யாமல் ஒரு வாகனம் போலப் பாவித்து அலங்காரத் திருவிழாவாகச் செய்யுமாறு பலர் கூறியதால் நந்தி பலிபீடம் கொடித்தம்பம் இல்லாமலேயே திருவிழாக்கள் நடந்தது. மேற்கூறிய குருக்களில் ஒருவர் நந்திக்குப் பதிலாக சிலம்புவைக்கலாம் எனவும் வேறு ஒருவர் எழுந்தருளி அம்பாளின் அங்க இலட்சணம் இராஜராஜேஸ்வரிக்குரியவையாக இருப்பதால் இராஜராஜேஸ்வரிக்குரிய நந்தி வைக்கலாம் எனவும் கூறியிருந்தனர்.

திருப்பணிச்சபை ஆலய வேலைகளைப் பொறுப்பெடுத்துச் செய்த போது கண்ணகி படிப்பக கட்டட வேலைக்குப் பணம் சேகரித்தது போல நாடகங்கள் நடத்தியும், சினிமா படங்கள் ஓடியும் பணம் சேகரிக்கப்பட்டது. முக்கியமாகப் பொதுத் திருவிழாச்செலவுகளுக்காக எமது மக்கள் தமது ஒருநாள் வருமானத்தைத் தந்தும், இளைஞர்கள் சேர்ந்து தொழிலுக்குப் போய் அன்றைய வருமானத்தைத் தந்தும் உதவினார்கள். மேலதிகமாக எமது ஊரவர் நெடுந்தீவில் போய் தொழில் செய்த போது நாங்கள் திரு நவமணி ஐயாவையும்

கூட்டிப் போய் 3, 4 நாட்கள் அங்கு நின்று அந்நாட்களின் வருமானம் முழுவதையும் எடுத்தும் ஆலய வேலைகள் நிறைவேற்றப்பட்டன.
திருப்பணிச்சபையால் முக்கியமாக

❖ ஆலய முன்றலில் இருந்த கிணறு மூடப்பட்டு வேறு இடத்தில் புதிய கிணறு கட்டப்பட்டது.

❖ தேர் ஓடுவதற்கு வீதி செப்பனிடப்பட்டது,

❖ தேர் முட்டி கட்டப்பட்டது.

❖ பூங்காவனத் தொட்டி கட்டப்பட்டது.

❖ ஆலய உள்வீதி மண்டபம் அமைக்கப்பட்டது.

ஆலய உள்மண்டப வேலைக்காக பாலை மரங்களை அப்போது முல்லைத்தீவு உதவி அரசாங்க அதிபராக இருந்த எனது உறவினர் திரு சிங்காரவேலின் உதவியுடன் பெற்றுக் கொண்டோம். இவ் வேலைக்கு திரு இரத்தினராசா உட்பட பலர் பெருந்தொகையான பணத்தைத் தந்துதவினார்கள்.

நான் ஒட்டுசுட்டானில் வேலை செய்த போது அங்கிருந்து மருதமரக்கன்றுகளும், வேப்பம்கன்றுகளும் வெளிவீதியிலும், திருகோணமலையில் இருந்த போது அங்கிருந்து நந்தியாவட்டை, நித்தியகல்யாணி போன்ற மரங்கள் உள்வீதியிலும் நடப்பட்டும் ஊர்ச்சுவாத்திய நிலை காரணமாகவும் சரியான பராமரிப்பு இல்லாமலும் அவைகள் பலனழிக்கவில்லை. இடையில் திருப்பணிச்சபை இளைஞர்கள் திரும்பவும் பேதம் பாரட்டியதை பொறுக்க முடியாமல் தலைவராயிருந்த திரு இலங்கைநாயகம் இராஜினாமாச் செய்ததையடுத்து காளவாயைச் சேர்ந்த திரு இராசாவைத் தலைவராகப் போட்டு சபை இயங்கிக் கொண்டுவந்தது.

திருப்பணிச்சபையால் பொதுத் திருவிழாக்களின் போது சேகரித்த பணத்தில் திருவிழாவிற்கு பல சிகரங்கள், பெருந்தொகையான செலவில் வாணவேடிக்கைகள், பல கூட்டம் மேளங்கள், பல லைற்மெசின்கள், பாட்டுக்கச்சேரிகள் நடனநிகழ்ச்சிகள் என ஒரு நாளில் செலவழிப்பதைக் குறைத்துத் திருவிழாவைச் சிக்கனமாக நடத்தி மிகுதிக் காசை கட்டட வேலைக்குப்பாவித்ததை எமது நிர்வாகத்தில் இருந்த சில இளைஞர்கள் விரும்பவில்லை. இதனால் நான் இல்லாத போது எனக்கெதிராக கதைப்பதைக் கேள்விப்பட்டதாலும், திருகோணமலையில் என்னை இந்து இளைஞர் பேரவையில் இணைத்துச் சில சமூகப்பணிகளை மேற்கொண்டிருந்த காரணத்தால் ஊருக்கு அடிக்கடி வரமுடியாத காரணத்தாலும் ஊரில் உள்ள இளைஞர்களிடம் திருப்பணிச்சபையை ஒப்படைத்து எனது பதவியிலிருந்து விலகினேன்.

திரு K. V. துரைசாமி அவர்களால் ஆலயத்திற்கு இராஜகோபுரம் கட்டிமுடிக்கப்பட்ட பின்பு கோபுரத்திற்கு வெளியில் ஆலயத்திற்குள் வரமுடியாதவர்கள் நின்று வழிபடுவதற்காக மண்டபம் கட்டுவதற்காகவும், பூங்காவனப்பந்தல் அமைப்பதற்காகவும் அந்த நாட்களில் மாவிட்டபுரம் வைரவர் ஆலய நிர்மாண வேலைக்காக இந்தியாவிலிருந்து வந்த சிற்பக்கலை வல்லுனரை அழைத்து வரை படங்கள் தயாரித்து வைத்திருந்த போதும் எனது காலத்தில் அதை நிறைவேற்ற முடியாமல் போனதையிட்டு பின்பு மனம்வருந்தியதுண்டு.

கண்ணகி அம்பாள் திருப்பணிச்சபையில் ஏற்பட்ட அனுபவம் இலண்டனில் உள்ள எல்லாச் சைவக் கோயில்களுக்குள்ளும் சிறந்த கோயில் என எல்லோராலும் வர்ணிக்கப்படும் ரூட்டிங் முத்துமாரி அம்மன் ஆலயத்திலும் திருப்பணிச்சபை நிறுவப்பட்டு திருவிழாக்கள் கோயில்த் தொண்டுகள் சிறப்பாக நடைபெறுவது யாராலும் மறுக்க முடியாத உண்மையாகும்.

மேற்படி விடயங்களை வருங்கால சந்ததியினருக்காக ஆவணப்படுத்தும் நோக்கில் எழுதியுள்ளேன். துர்அதிஷ்டவசமாக சரியான ஆண்டுகள் எனக்கு ஞாபகத்தில் இல்லாததால் அவற்றைப் பற்றிக் குறிப்பிடவில்லை. மேற்படி விடயங்களில் ஏதாவது தவறுகள் அல்லது குறிப்பிடப்படாத விடயங்கள் இருந்தால் எனக்கு அறியத்தந்தால் இதை முழுமைப்படுத்த உதவியாக இருக்குமென உங்களைக் கேட்டுக் கொள்கிறேன்.

அன்பின்

நாகேந்திரம் கருணாநிதி

N. Karunanithy
109, Caledon Road,
Eastham,
London,
E 6 2 H D.
0208 552 0817
0208 767 9881
0781 278 4048